**மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 06 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 02 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய நுவரகம்பலாத பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுகளை ஒழுங்குபடுத்துவதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்படவில்லை. | கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணத்தின் வருமானம் ரூபா. 6,125,749 ஆக இருந்ததோடு ரூபா. 6,286,746 ஆக வருமான செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 160,997 மேலதிகமான காட்டப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். | 2018 டிசம்பர் மாதத்திற்கான பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தின் பெறுமதி மாகாண இரைவரித் திணைக்களத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தில், 2017 ஆம் ஆண்டில் மே மற்றும் ஜுன் மாதங்களுக்கான பெற வேண்டிய ரூபா. 808,996 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் 2017 ஆம் ஆண்டின் மே மற்றும் ஜுன் மாதத்திற்கான பெறுமதிகளை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக ரூபா. 808,996.00 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 346,035 பெறுமதியான 3 குளிரூட்டிகளின் பெறுமதியை நிலையான சொத்துக்களில் ரூபா. 34,035 ஆக காட்டப்பட்டிருந்ததனால் நிலையான சொத்துக்கள் ரூபா. 312,000 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் 03 குளிரூட்டிகளின் பெறுமதியை கணக்கீடு செய்யும்போது சரியான பெறுமதியான ரூபா. 346,035.00 தொகை ரூபா. 34,035.00 என தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (iv) | சபைக்கு உரித்தான 2007 ஆம் ஆண்டில் பெறப்பட்ட WP SE 2828 இலக்க கை உழவு இயந்திரத்தின் பெறுமதி ரூபா 175,000 ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா. 1,750,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | கணக்குகள் சரியான முறையில் தயார் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (v) | 2007 ஆம் ஆண்டில் ரூபா. 3,640,264 செலவிடப்பட்டு தயார் செய்யப்பட்ட கழிவுத் தொகுதியின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கான அனைத்து மானியச் செலவுகளும் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் கழிவுத் தொகுதிக்கான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 5 கணக்குப் பிரிவுகளின் பெறுமதியையும் அதனுடன் தொடர்புடைய பிரதி ஆவணங்களையும் ஒப்பிடுகையில் | மீதிகளின் வித்தியாசத்தை ஒப்பிட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தில் இடர்கடன் சம்பளத்தில் கழித்தல் மற்றும் பிரதேச சபையின் ஊழியர் கடன் மீதியின் அடிப்படையில் பீ.எஸ் 04 |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 3,058,937 வித்தியாசம் காணப்பட்டது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அறிக்கைகளில் பதிவு செய்யும்போது ஏறபட்ட தவரின் காரணமாக இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆந் திகதிக்கு ரூபா. 303,613,965 ஆன ஆரம்பக் கணக்கு மீதி வருடத்தின் நிதிக் கூற்றுகளுக்கு ரூபா. 288,578,148 ஆக கொண்டு வரப்பட்டுள்ளதால் ரூபா. 56,456,450 வித்தியாசம் காணப்பட்டது. | உறுதி செய்யப்பட்ட முன்னைய வருடங்களின் நிதிக்கூற்றுகளின் மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக எடுக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படவில்லை. |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வருடக் கணக்காக நிலவி வரும் 06 கணக்கு மீதிகளிலிருந்து பெற வேண்டிய ரூபா. 3,075,611 மொத்த தொகை மீளாய்வாண்டிற்குள் அறவிடப்படாது காணப்பட்டது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | முழுமையான சில ஆண்டுகளாக நிலவி வரும் 4 கணக்குப் பிரிவுகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா. 4,355,666 தொகை மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படாது காணப்பட்டத. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. | தொழில் ஆவணங்கள் ஒழுங்கான முறையில் பராமரிக்கப் படாததன் காரணமாக இந்த தொகை செலவிடப்பட்ட விதத்தை இனங்காண முடியாமல் உள்ளது. |

**(உ) கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 125,229,278 பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்கு உரிய சொத்துப் பதிவேடுகள், உரித்துப்பத்திரம், மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் சுற்றறிக்கை பிரகாரம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 203 அதிகாரத்தின் 2.1 ஆம் பிரிவு | வருடக் கணக்காக சபைக்கு கிடைத்திருந்த 02 டிராக்டர்கள், 02 பவுசர்கள் மற்றம் கை டிராக்டர் என்பன 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வாகனங்களை பதிவுசெயய் நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2045 ஆம் இலக்க 2011 நவம்பர் 10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் | 2018 ஆம் ஆண்டில் பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் சபைக்குரிய வீதிகளுக்கு 13021 கியப்சரளைக் கற்ககள் போக்குவரத்து செய்வதற்காக ரூபா 1,154,600 ஆன கட்டணங்கள் அறவீடு இடம்பெறவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரளைக் கற்களுக்காக அரசிறை பிரதேச செயலகத்தினால் அறவிடப்பட்ட போதும் வீதிகளில் சரளைக் கற்களுக்காக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 6,578,175 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,166,099 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 480,000 | 337,930 | 337,930 | 2,113,950 | 515,000 | 316,350 | 316,350 | 2,113,950 |
| (ii) | வாடகை | 5,533,525 | 3,771,743 | 3,690,701 | 1,308,382 | 5,249,192 | 3,328,167 | 2,396,505 | 1,227,340 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,982,680 | 1,083,408 | 1,083,408 | - | 976,500 | 1,391,928 | 1,391,928 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,000,000 | 10,286,746 | 5,444,997 | 20,277,231 | 6,000,000 | 6,949,393 | - | 15,435,482 |
| | மொத்தம் | 15,996,205 | 15,479,827 | 10,557,036 | 23,699,563 | 12,740,692 | 11,985,838 | 4,104,783 | 18,776,772 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படும் ரூபா 1,403,550 ஆன நிலுவை கழிவுப்பொருள் சேவைக் கட்டணங்களை அறவிடுவதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கழிவுப்பொருள் வரி அறவிடும் போது உடன்படிக்கை மேற் கொள்ளாமல் வருமானம் சேகரிக்கப்பட்ட காரணத்தினால் நிலுவை காணப்படுவதுடன் நிலுவை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,332,674 மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 13,944,557 ஆகும். | தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப விதிகள் பிறப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. |

**(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகாரப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட கழிவு முகாமைத்துவத்திற்காக 2016 ஆம் ஆண்டில் லோலுகஸ்வெவ பிரதேசத்தில் ரூபா. 3,640,264 செலவிலான பிலிசரு நிலையமொன்று கட்டப்படடிருந்தும் இது வரையில் முறையாக கழிவு முகாமைத்துவமொன்று நடாத்தப்படவில்லை என்பது தெரியவந்துள்ளதுடன் சேகரிக்கப்படும் கழிவுகள் பிரிக்கப்படாது செயற்திட்ட நலையத்தில் முறையின்றி புதைக்கப்படுவது தெரியவந்துள்ளது. | 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுவது, கழிவுகளை வகைப்படுத்திப் பெற்றுக்கொள்வது என்பன கழிவு முகாமைத்துவ மையத்தை முறையாக ஆரம்பிக்க செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் ஆகும். | மிக விசாலமான நிலப் பிரதேசத்தைக் கொண்ட மத்திய நுவரகம்பலாத பிரதேசம், பிரதேசத்தின் கழிவு சேகரிப்பது மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஊழியர்கள் பற்றாக் குறை காரணமாக கழிவு முகாமைத்துவத்தை முறையாக செயற்படுத்த கடினமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. | 2030 நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த நிகழ்சியின் கீழ் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த போதுமான அளவு பணம் சபையிடம் இல்லாததால் இந்த அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்த முடியாது காணப்படுகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்திற்குள், இனங்காணப்பட்டிருந்த 32 அனுமதிக்கப்படாத கட்டுமானங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிக்கப்படாத கட்டுமானங்கள் தொடர்பாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சபை முன்வர வேண்டும். | புனித நகரமான தந்திரிமலையில் அனுமதிக்கப்படாத கட்டுமானப் பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருப்பதுடன், அனுமதிக்கப்படாது கட்டப்பட்டுள்ள கடைகள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டோருக்கு மற்றும் மாவட்ட செயளாலருக்கு அறிவித்தல் வழங் கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அது குறித்து வழிமுறைகளை கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பணியணியினர் 55 ஆக இருப்பதோடு, 2019 மார்ச் 31 ஆந் திகதிக்கு 39 நிலையான பணியணியினர் மற்றும் 07 மேலதிகமான பணியணியினராக 46 மொத்தப் பணியணியினர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கமைய நிலையான பணியணியினரில் 18 உத்தியோகத்தர்களுக்கான | அலுவலக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சி திணைக்களத்திற்கும் அரச செவைகள் ஆணைக்கழுவிற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளள போதும் ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகை ஊழியர் மூலம் வெற்றிட ஊழியர்களின் சேவை மேவுகை |

| | | |
|---|---|---|
| வெற்றிடங்கள் மற்றும் 2 பணியணியினர் மேலதிகமாகக் காணப்பட்டனர். | | செய்யப்படுகின்றன. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்கு உரித்தான ருபா 2,450,000 பெறுமதியான 7 வாகனங்கள் 02 ஆண்டுகள் முதல் 5 வருட காலமாக செயலற்ற நிலையில் காணப்பட்டது. | பழுது பார்த்தல் சிக்கனமற்ற வாகனங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாறு பயன்படுத்தாத முடியாத நிலையில் காணப்படும் வாகனங்கள் தொடர்பாக 2019 பொருட்கள் மதிப்பாய்வின்போது தகுந்த வழிமுறையை கையாள நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 பெறுகை

#### பெறுகை திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுகை திட்டமொன்று தயாரிக் கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை |